மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்

இரண்டாம் தவணை– 2020

தரம் - 10 குடியியற்கல்வி கற்றல் கையேடு-1

அலகு:-2 கற்றல் காலம்:- 12பாடவேளை

# அதிகாரத்தைப் பன்முகப்படுத்தலும், பகிர்ந்தளித்தலும்

❖ **அதிகாரம்**-சனநாயக ஆட்சிமுறையில் அதிகாரம் என்பது ***அரசின் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அந்த அரசுக்கு இருக்கின்ற ஆற்றல் என்பதாகும்.***

❖ **அதிகாரத்தின் இறுதி உரிமை பொது மக்களிடமே உள்ளது.** மக்களிடம் காணப்படும் அதிகாரமே இறைமை எனப்படும். இறைமைக்குள் அடங்குவனவாக நிர்வாக அதிகாரம், வாக்குரிமை, அடிப்படை உரிமை போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

❖ **அதிகாரத்தின் வகைகள்** - **அரசியல் அதிகாரம்.**
**பொருளாதார அதிகாரம்.**
**சமூக அதிகாரம்.**

- *அரசியல் அதிகாரம் என்பது* அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவோர் தாம் விரும்பியவாறு அதிகாரத்துக்குட்பட்டோரை ஆட்சி செய்யும் ஆற்றலும் தமது விருப்பத்துக்கு இணங்காத போது வற்புறுத்துவதன் மூலம் அடிபணிய வைக்கும் ஆற்றலே அரசியல் அதிகாரம் எனப்படும்.
- *பொருளாதார அதிகாரம் என்பது* பொருளாதார முறையொன்றின் அதிகாரம் பெற்ற குழுவினரால் ஏனையோரை வழிநடத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி பொருளாதார அதிகாரம் எனப்படும்.
- *சமூக அதிகாரம் என்பது* ஒரு சமூகத்தில் வாழும் பிரசைகள் மற்றும் சமூக இயக்கங்கள் என்பவற்றுக்கு மேலாக செயற்படுவதற்கு சமூகத்திற்குள்ள ஆற்றல் என்பதாகும்.

## அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல் அல்லது அதிகாரத்தைப் பரவலாக்குதல்
**(Decentralization of Power)**

❖ **அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல் என்பது** மத்திய அரசிடம் உள்ள நிர்வாக அதிகாரங்களுள் சிலவற்றை பிராந்திய நிர்வாக அலகுகளிடம் கையளித்தலாகும்.

❖ நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்தும் வகையிலும் பிராந்திய ரீதியான நபர்களை நிர்வாக நடவடிக்கைகளில் பங்கு கொள்ளச் செய்யும் வகையிலும் மத்திய அரசுக்குரிய அதிகாரங்களை பிராந்திய நிர்வாக அலகுகளிடம் ஒப்படைத்தல் அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல் அல்லது *அதிகாரத்தைப் பரவலாக்குதல் எனப்படும்.*

❖ **அதிகாரத்தைப் பன்முகப்படுத்துகையில் அவதானிக்கக் கூடிய இரு பிரதான இயல்புகள்**

- எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் அதிகாரங்களை மத்திய அரசு பெற்றுக் கொள்ள முடியும்.
- அரசின் சட்டத்துறையினால் அனுமதிக்கப்பட்ட மசோதா ஒன்றின் மூலம் அது செயற்படுத்தப்படும்.

❖ *அதிகாரத்தைப் பன்முகப்படுத்துகையில்* மத்திய அரசு மற்றும் அதன் பல்வேறு நிறுவனங்கள் வாயிலாக திட்டமிடல், முகாமை செய்தல், வளங்களைப் பெறல், விநியோகித்தல் இவை தொடர்பான பொறுப்புக்களை பிரதேச மட்டத்திலான நிர்வாக நிறுவனங்களிடமும், உள்ளூராட்சி நிறுவனங்களிடமும், மாகாண சபைகளிடமும், அதிகாரம் பரவலாக்கப்பட்ட அரச அதிகார சபைகளிடமும், கூட்டுத்தாபனங்களிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கும்.

❖ ***அதிகாரத்தைப் பரவலாக்கம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள்***

1. இலங்கையின் நிர்வாக அதிகாரங்களை தேசிய மட்டத்தில் இருந்து பிரதேச மட்டம் வரை பன்முகப்படுத்தப்பட்டிருத்தல்.




2. ***மத்திய அரசின் கருமங்களைப் பிரதேச ஆட்சி அலகுகளிடம் ஒப்படைக்கப்பட்டிருத்தல்.*** இலங்கையில் செயற்பட்டு வரும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ( **மாநகர சபை**, **நகர சபை**, **பிரதேச சபை**)
3. அரச முயற்சியாண்மைக்கு அல்லது அதிகார சபைகளுக்குரிய அதிகாரங்களை பிரதேச அலகுகளிடம் ஒப்படைத்தல். இதன் மூலம் அரச முயற்சிகளை மேற்கொள்வதற்கான திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகள் என்பவை செயற்படுவதற்கு தேவையான நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமை.

# ஒற்றையாட்சி அரசு

- அரசின் ***சட்டம்,நீதி,நிர்வாகம்*** எனும் முத்துறை அதிகாரங்களும் ஒரு மத்திய அரசினால் செயற்படுத்தப் படுமாயின் அந்த அரசு ***ஒற்றையாட்சி அரசு என அழைக்கப்படும்.***

- ஒற்றையாட்சி பற்றி ***பேராசிரியர் ஹர்மன் .ஜே.பைனர்*** என்பவரின் வரைவிலக்கணம்
  - **எல்லா வகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய அதிகார பீடத்திடம் மையப்படுத்தப்பட்டிருப்பின் அது ஒற்றையாட்சி முறைமையாகும்.**

- ஒற்றையாட்சி நிலவும் சில நாடுகள்

  **இலங்கை , பிரான்ஸ் , யப்பான் , நேபாளம் , ஐக்கிய இராச்சியம்**

- *அதிகாரம் பரவலாக்கம் செய்யப்பட்ட நாடுகள் ஒற்றையாட்சி நாடுகள் எனப்படும்.* இந் நாடுகளில் நிலவும் ஆட்சி முறை ஒற்றையாட்சி முறை என அழைக்கப்படும்.

- ***ஒற்றையாட்சியின் பண்புகள்***

  01. அரசின் சட்டத்துறை, நீதி, நிறைவேற்றுத்துறையின் அதிகாரங்கள் ஒரு மத்திய அரசினால் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படல்.

  02. மத்திய அரசுக்குரிய நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு சில அதிகாரங்களை பிராந்திய நிர்வாக அலகுகளிடம் ஒப்படைக்கப்பட்டிருத்தல் இங்கு எவ் வகையிலும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படாது.

  03. அரசியல் யாப்பில் அரசின் இயல்பு ஒற்றையாட்சி என்று தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் முக்கியமாகும்.

  04. மத்திய அரசின் சட்டத்துறை மூலம் நிறைவேற்றப்படும் சட்டம் ஒன்றின் மூலம் மாத்திரம் அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டிருத்தல்.

  05. மத்திய அரசுக்கு தேவையான சந்தர்ப்பத்தில் பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாக அதிகாரங்களை மீண்டும் பெற்றுக் கொள்ளல்.

- **ஒற்றையாட்சி முறையொன்றின் பண்புகள் பற்றி அரசியல் அறிஞர்கள் வெளியிட்டுள்ள வேறுபட்ட இரண்டு கருத்துக்கள்.**
  - *பேராசிரியர் ஏ.வீ.டைசி*

**ஒரு மத்திய அதிகார பீடம் மாத்திரம் சட்டமியற்றும் உயர் அதிகாரத்தைக் கொண்டிருப்பது ஒற்றையாட்சியின் அடிப்படைப் பண்பாகும்.**

- *பேராசிரியர் சீ.எப்.ஸ்ட்ரோங்*

***மத்திய அரசின் மேன்மை நிலையும் மேலதிக இறைமையுள்ள நிறுவனங்கள் அரசியல் யாப்பில் இல்லாதிருப்பதும் ஒற்றையாட்சியில் காணப்படும் பிரதான பண்பாகும்.***

❖ ***இதன்படி ஒற்றையாட்சி முறையின் பொதுவான பண்புகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.***

01. அரசின் இறைமை அதிகாரம் ஓரிடத்தில் (மத்திய அரசிடம்) குவிந்திருக்கும்.

02. சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை எனும் அரசின் முத்துறை அதிகாரங்கள் மத்திய அரசிடம் மையப்படுத்தப் பட்டிருக்கும்.

03. சட்டமியற்றுவது தொடர்பான உயர்நிறுவனமாகச் செயற்படுவது மத்திய அரசின் சட்டத்துறையான பாராளுமன்றமாகும்.

04. நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக உள்ளூராட்சி நிறுவனங்கள் வரையில் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்டிருக்கும்.
    (உதாரணம்- இலங்கையில் செயற்பட்டு வரும் மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள்

❖ ***ஒற்றையாட்சி முறையின் நன்மைகள்***

- நிறைவேற்றுத்துறையும், நீதித்துறையும் முழு நாட்டிற்கும் பொதுவானதாக அமையும்.
- மத்திய அரசு, மாநில அரசுகள் எனும் இரு வேறு அதிகார நிறுவனங்கள் இன்மையால் அவற்றுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகள் இந் நாடுகளில் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகும்.
- ஒற்றையாட்சி முறை பல்லின சமூக அமைப்பு இல்லாத நாடுகளுக்கே மிகப் பொருத்தமானது. இம் முறையின் கீழ் அரசாங்கம் விரைவாகவும் இலகுவாகவும் தீர்மானங்களை மேற்கொள்ள முடியும்.

## அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல்
**(Devolution of Power)**

❖ **“மத்திய அரசின் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை அதிகாரங்களை அரசியல் யாப்பின் மூலம் பிராந்திய ஆட்சி அலகுகளிடம் ஒப்படைக்கப்படுதல்.”** ***அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் எனப்படும்.*** அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் என்பது அரசியல் யாப்பின் மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

❖ ***நவீன அரசுகள் அதிகாரப் பங்கீடு செய்வதற்கான காரணங்கள்***

- தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- நாட்டின் பாரிய பரப்பளவு விசாலமானதாக காணப்படும் போது ஒரு மத்தியில் இருந்து நாட்டை நிர்வகிப்பது சிரமமானதாக இருத்தல்.
- ஆட்சி நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமானோருக்கு கிடைத்தல்.
- ஓர் அரசில் பிராந்திய ரீதியாக செறிந்து வாழும் பல்வேறு மொழி, சமயம், இனங்களைச் சேர்ந்த மக்களின் தனித்துவத்திற்கு மதிப்பளித்து சகல இனக் குழுக்களையும் பொதுத் தேசியக் குறிக்கோள் ஒன்றின் கீழ் இணைத்து ஆட்சி செய்வதற்கு சமஷ்டி ஆட்சி முறை உதவும்.

## சமஷ்டி அரசு / கூட்டாட்சி

❖ மத்திய அரசின் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை அதிகாரங்களை அரசியல் யாப்பின் மூலம் பிராந்திய ஆட்சி அலகுகளிடம் பகிர்ந்தளிக்கப்பட்ட அரசு சமஷ்டி அரசு எனப்படும்.

❖ அரச அதிகாரங்கள் மத்திய அரசிடமும் பிராந்திய அரசுகளிடமும் பகிர்ந்தளிக்கப்பட்டிருத்தல் சமஷ்டி முறையின் அடிப்படைப் பண்பாகும்.

❖ சமஷ்டி அரசாங்க முறையில் மத்திய அரசு, மாநில அரசுகள் எனும் இரு வகையான அதிகார மையங்களை அவதானிக்கலாம்.

❖ சுயாதீன அரசுகள் சில ஒன்றுபட்டு நிர்வாகத்தை இலகுபடுத்திக் கொள்வது சமஷ்டி முறையின் தோற்றத்துக்கான பிரதான காரணமாகும்.

❖ சமஷ்டி அரசு பற்றி அரசியலறிஞர்கள் முன்வைத்துள்ள வரைவிலக்கணங்கள் பின்வருமாறு.

➢ *ஏ.வீ.டைசி*

**வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு வழிவகுக்கும் ஆட்சி முறைமையாகும்.**

➢ கலாநிதி.கே.சீ.வியர்

**தத்தமது அதிகார எல்லைக்குள் சுயாதீனமாக செயற்பட முடிந்த போதிலும் சில விடயங்கள் தொடர்பாக ஒற்றுமையுடன் செயற்படுவதற்கும் வழிவகுக்கும் நிலைமை ஆகும்.**

❖ சமஷ்டி ஆட்சி முறையின் பிரதேச அலகு **"மாநிலம்"** என அழைக்கப்படும். சுவிட்சர்லாந்தில் பிராந்திய அலகு '**கென்ரன்**' என அழைக்கப்படுகின்றது.

❖ *சமஷ்டியாட்சி நிலவும் சில நாடுகள்*

**இந்தியா , சுவிஸ்லாந்து , ஐக்கிய அமெரிக்கா , அவுஸ்ரேலியா**

### ❖ சமஷ்டி அரசொன்றின் பண்புகள்

- எழுதப்பட்ட அரசியல் யாப்பு காணப்படுதல்.
- சட்டவாக்கத்துறையில் மேற்சபையொன்று காணப்படுதல்.
  உதாரணம் - ஐக்கிய அமெரிக்காவில் **செனட் சபை** காணப்படுதல்.
- மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உரிய அதிகாரங்கள் அரசியல் யாப்பின் மூலம் உள்ளடங்கப்பட்டிருத்தல்.
- அரசியல் யாப்புக்கு விளக்கமளிக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருத்தல்.
  உதாரணம் - ஐக்கிய அமெரிக்காவில் சமஷ்டி நீதிமன்றம் காணப்படுதல்.

### ❖ சமஷ்டி அரசொன்றின் அனுகூலங்கள்

- பல்லின சமூகமொன்றில் பல்வகைமைக்கு மதிப்பளிக்கும் வகையில் பொதுத் தேசியம் ஒன்றைக் கட்டியெழுப்புதல்.
- பரந்த நிலப்பரப்பில் காணப்படும் அரசுகளில் நிர்வாக ரீதியிலான தீர்மானங்களை இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல்.
- சனநாயக ஆட்சி சக்திவாய்ந்ததாக காணப்படல்.
- ஓர் அரசு கட்டளையிடும் வகையில் செயற்படுவதைத் தடுக்க முடியுமாயிருத்தல்.

### ❖ சமஷ்டி அரசொன்றின் பிரதிகூலங்கள்

- அதிகாரப் பங்கீட்டின் போது தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்கள் தொடர்பில் மாநில அரசுகள் அதிருப்தியுடன் செயற்படல்.
- மாநிலங்கள் மத்திய அரசிலிருந்து விலகிச் செல்லும் போக்கு காணப்படல்.
- இரண்டாம் மன்றமொன்று செயற்படுவதால் சட்டவாக்க நடவடிக்கைகள் தாமதமடைதல்.
- மத்திய, மாநில அரசுகள் யாப்பின் மூலம் தீர்வுகளுக்கு வரும் போது சில துறைகளில் ஏற்படும் பிரச்சினைகளால் நிர்வாகம் ஸ்தம்பித்தல்.

- மாநில நிர்வாகம் தொடர்பில் அனுபவமும் ஆற்றலும் மிக்க அதிகாரிகளுக்கான பற்றாக்குறை நிலவுவதனால் நிர்வாக முறை சீர்கெடல்.

### ❖ சமஷ்டி அரசொன்று வெற்றி பெறுவதற்கான இயல்புகள்.

- அரசியல் யாப்புக்கு ஏற்ப செயற்படல்.
- சகல இனக்குழுக்களும் தேசிய உணர்வுடன் செயற்படல்.
- நிதி வளங்களைப் பங்கிடும் போது நேர்மையான முறையில் மாநில அரசுகளுக்கு வழங்கப்படுதல்.

### ❖ *சமஷ்டி அரசுகளின் புதிய போக்குகள்*

- அரசியல் யாப்புக்கு விளக்கமளிக்கும் போது அரசுக்கு சார்பான வகையில் மேற்கொள்ளல்.
- யாப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு மாநில அரசுகளின் விருப்பத்தை பெற்றுக் கொண்ட போதிலும் பொதுவான சட்டங்களை உருவாக்குகின்ற போது மாநில அரசுகளை உதாசீனம் செய்தல்.
- பிராந்திய அரசுகளால் மேற்கொள்ளப்படும் நலன்புரி நடவடிக்கைகளை அதிகரிக்கும் போது அதன் பொறுப்புக்கள் மத்திய அரசு மீது சுமத்தப்படல்.
- தொடர்பாடல் போக்குவரத்துச் சேவைகளில் ஏற்பட்டுள்ள பாரிய வளர்ச்சி காரணமாக தொடர்புகள் துரிதமடைதல்.
- இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் சர்வதேச அரசியல் களத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம்.

  ***உதாரணம்*** - ***ஐக்கிய அமெரிக்காவில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் விருத்தியடைதல்.***

  ***உலகப் பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வகையில் முழு நாட்டுக்குமான பொருளாதார தீர்வினைக் காணும் பொறுப்பு மத்திய அரசு மீது சுமத்தப்படல்***

- மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையில் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது மத்திய அரசின் அதிகாரம் மேலும் வலுவடையும். மத்திய அரசினால் மறில அரசுகள் இயங்குவதற்கு தேவையான நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு நிதி உதவி வழங்கப்படும் போது பல்வேறு நிபந்தனைகள் மத்திய அரசினால் விதிக்கப்படுதல்.

# இலங்கையில் அதிகாரப் பன்முகப்படுத்தல் தொடர்பான வரலாறு

- மிகப்புராதன காலம் தொட்டு எமது நாட்டில் நிலவிய ஆட்சி முறையை நோக்கின் நிர்வாகத்தை இலகுபடுத்தும் வகையில் அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப் பட்டிருந்தது. *உ-ம் அநுராதபுரம் காலத்தில் முதல் மன்னனான பண்டுகாபய மன்னன் கிராம நிர்வாகத்திற்காக **'கம்பார'** , **'கமிக'** , போன்ற அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருந்தமையைக் குறிப்பிடலாம்.*

- ஐரோப்பியர் எமது நாட்டை ஆட்சி செய்த போது பல நிர்வாக அதிகாரிகள் மூலம் பிரதேச அலகுகள் நிர்வாகம் செய்யப்பட்டது.

  உ-ம் *1815ஆம் ஆண்டு பிரித்தானியரால் மாகாண மட்டத்தில் **(றெசிடெண்ட்)** அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

### பிரித்தானியர் ஆட்சியின் போது இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் செயற்பட்டிருந்த விதம்.

- பரித்தானியர் ஆட்சியின் போது இலங்கையின் அதிகாரப் பரவலாக்கமாக **1865ஆம் ஆண்டு *மாநகரசபை கட்டளைச் சட்டம்*** நிறைவேற்றப்பட்டமை. சிறப்பம்சமாகும்.

- இச் சட்டத்தின் கீழ் **1865இல் கொழும்பும், 1866 இல் கண்டியும்** , மாநகர சபைகளாக உருவாக்கப் பட்டன.

- **1924ஆம்** ஆண்டு கிராமசபைகள் கட்டளைச் சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது.

- 1940 **ஆம்** ஆண்டு நகரசபைகள் உருவாக்கப்பட்டதுடன் ,

- **1943ஆம்** ஆண்டு உள்ளூராட்சி மன்ற கட்டளைச் சட்டம் அங்கிகரிக்கப்பட்டது.

### சுதந்திரத்தின் பின்னர் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள்

- **1973ஆம் ஆண்டு** அதிகாரப் பரவலாக்கத்தின் பொருட்டு அரசியல் ***அதிகாரசபை முறை*** உருவாக்கப்பட்டது.

- **1980ஆம்** ஆண்டு மாவட்ட அமைச்சு முறையின் கீழ் ***மாவட்டசபைகள் அறிமுகம்*** செய்யப்பட்டன. இதன் மூலம் ***கிராமசபைகள், சிறு நகரசபைகள் என்பன நீக்கப்பட்டன.***

- **1987ஆம்** ஆண்டில் *15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின்* மூலம் பிரதேச சபைகள் நிறுவப்பட்டன.

## இலங்கையில் அதிகாரப்பங்கீடு தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட பிரயத்தனங்கள்.

- *1926ஆம்* ஆண்டு S.W.R.D. **பண்டாரநாயக்க** அவர்களால் மலைநாட்டுப் பகுதிக்கு சமஷ்ட்டி ஆட்சி முறையின் தேவை பற்றி வெளியிட்ட கருத்து முக்கியமானது.

- சுதந்திரத்தின் பின்னர் **1957** இல் *S.W.R.D. பண்டாரநாயக்க மற்றும் S.J.V செல்வநாயகம்* போன்றோர்களால் மேற் கொள்ளப்பட்ட **பண்டா~ செல்வா** ஒப்பந்தம், 1965 இல் **டட்லி~ செல்வா** ஒப்பந்தம் இவற்றிற்கு முக்கியமான உதாரணங்களாகும். எனினும் இந்த ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

## இலங்கையில் மாகாணசபை அமைக்கப்படுதல்.

- ***1978ஆம் ஆண்டு*** இரண்டாம் குடியரசு யாப்பில் ஏற்படுத்தப்பட்ட **13ஆம் இலக்கச் சட்டத் திருத்தம்** மற்றும் ***1978ஆம் ஆண்டில்*** **42ஆம் இலக்க பாராளுமன்றக் கட்டளைச் சட்டம்** என்பவற்றின் மூலம் இலங்கையில் மாகாணசபை முறை உருவாக்கப்பட்டது.

- ஆரசியல் யாப்பின் ***எட்டாம் உப தலைப்பின்*** கீழ் **ஒன்பது மாகாணசபைகள்** இலங்கையில் உருவாக்கப்பட்டன. அவையாவன *வடமாகாணசபை* , ***கிழக்கு மாகாணசபை*** , *மேல் மாகாணசபை,* ***மத்தியமாகாணசபை,*** *வடமத்திய மாகாணசபை,* ***வடமேல் மாகாணசபை,*** *ஊவா மாகாணசபை,* ***சப்ரகமுக மாகாணசபை,*** *தென் மாகாணசபை,என்பனவாகும்.*

## மாகாணசபை

- அரசியல் யாப்பின் *154ஈ(1)* சரத்தில் மாகாணசபையின் கட்டமைப்புப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதன் படி மாகாணசபை அமைக்கப்பட்ட மாகாணத்தின் பரப்பளவு , சனத்தொகை என்பன கவனத்தில் கொள்ளப்பட்டு சட்டத்தால் எடுக்கப்படும் முடிவின் பிரகாரம் பிரதிநிதிகள் தொகை தீர்மானிக்கப்படும்.

- மாகாணசபையின் பதவிக்காலம் **ஐந்து** வருடங்களாகும்.

- மாகாணசபையின் பிரதிநிதிகள் அனைவரும் ***பொதுமக்களின் வாக்குரிமையால்*** தெரிவு செய்யப்படுவர்.

- மாகாணசபையின் சட்டவாக்கத்துறை பிரதிநிதிகளிலிருந்தே **மாகாண முதலமைச்சரும் நான்கு பேருக்கு மேற்படாத அமைச்சர்களும்** தெரிவு செய்யப்படுவர்.

## மாகாணசபை ஒன்றின் நிர்வாகக்கட்டமைப்பு

- மாகாணசபை ஒன்றின் நிர்வாகக் கட்டமைப்பில் **ஆளுநர், முதலமைச்சர், அமைச்சரவை, மாகாணசபைப் பிரதிநிதிகள் சபை** எனும் பிரதான அலகுகள் சிலவற்றைக் கொண்டமைந்துள்ளது.
- மாகாணசபை ஒன்றின் நிர்வாகக் கட்டமைப்பை பின்வரும் வரிப்படத்தின் மூலம் காணலாம்.




### மாகாண ஆளுநர்.

- ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்.
- ஆளுநர் மத்திய அரசுக்கும் , மாகாண சபைக்கும் இணைப்பாளராகக் கடமையாற்றுவார்.
- இவரது பதவிக்காலம் ***ஐந்து*** வருடம்.
- ஆளுநர் விரும்பினால் தானாக தனது பதவியை இராஜினாமாச் செய்யலாம். அதேபோன்று மாகாணசபை உறுப்பினர்களில் *2/3 பெரும்பான்மை* உறுப்பினர்களின் சம்மதத்துடன் நிறைவேற்றப்பட்ட ஒரு பிரேரணையை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் ஆளுநரை பதவியில் இருந்து நீக்கலாம்.

## ஆளுநரின் அதிகாரங்களும் பணிகளும்

- மாகாணசபையைக் கூட்டுதல், தவணைகளை முடிவுறுத்துதல், கலைத்தல், மாகாணசபையில் உரையாற்றுதல், மற்றும் செய்திகளை அனுப்புதல்
- முதலமைச்சரை நியமித்தல் , அமைச்சரவை மற்றும் மாகாணசபை நிாவாக அதிகாரிகளை நியமித்தல்
- மாகாணசபையின் கொள்கைகளை அனுமதித்தல்.
- அவசரகால நிலமைகளின் போது ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் செயற்படுதல். **உ~ம்** மாகாணசபை வலுவிழக்கும் போது நிதிரீதியாக முடக்கமடையும் போதும். மத்திய அரசுக்கும், மாகாணசபைக்கும் இணைப்பாளராகச் செயற்படுதல்
- மாகாணசபையின் பெயரளவு நிர்வாகியாக மாகாணசபையின் முதலமைச்சரின் ஆலோசனைப்படி செயற்படுதல்.

## முதலமைச்சரும் அமைச்சரவையும்.

- முதலமைச்சரை நியமனம் செய்வது **ஆளுநரின் பணிகளுள்** ஒன்றாகும்.
- முதலமைச்சா் மாகாணசபை உறுப்பினர்களுள் பெரும்பான்மையானோரின் விருப்பத்துக் குரியவராய் இருத்தல் வேண்டும்
- முதலமைச்சரின் ஆலோசனைப்படி ஏனைய அமைச்சர்களை நியமித்தல் வேண்டும்.
- **முதலமைச்சரைப்** போலவே ஏனைய **அமைச்சர்களும்**, தமது செயற்பாடுகள் தொடர்பாக **மாகாணசபைக்கு கூட்டாக பொறுப்புச் சொல்ல கடமைப்பட்டுள்ளார்கள்.**

## முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின், அதிகாரங்களும் பணிகளும்.

- மாகாண ஆளுநருக்கு ஆலோசனை வழங்குதல்.
- மாகாண வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்,
- மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தி, நிர்வாகத் திட்டமிடல், என்பவற்றைத் தயாரித்து அவற்றினை நடைமுறைப்படுத்துதல்.

## மாகாணசபை ஒன்றின் அதிகாரங்களும், தொழிற்பாடுகளும்.

- 1978 அரசியல் யாப்பின் 13ஆம் சீர்திருத்தத்தின் படி **மூன்று நிரல்களின் பிரகாரம் அதிகாரங்கள் வகுக்கப்பட்டன.**
- **1ஆவது** நிரல் (மாகாணசபைக்குரிய அதிகாரங்கள்)
- **2ஆவது** நிரல் (மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள்
- **3ஆவது** நிரல் ( இணைந்து நிறைவேற்றும் பணிகள்)

### 1ஆவது நிரல் (மாகாணசபைக்குரிய அதிகாரங்கள்)

❖ இதன் கீழ் மாகாணசபைக்குரிய அதிகாரங்கள் விபரிக்கப்பட்டுள்ளன.

❖ **37 அதிகாரங்களும் பணிகளும்** குறிப்பிடப்பட்டுள்ளன.
**உ-ம்.** மாகாணத்தின் பொருளாதாரத் திட்டமிடல், உள்ளூராட்சி நடவடிக்கைகள், மாகாண வீடமைப்பும் அபிவிருத்தியும், சமூகசேவைகளும் புனர்வாழ்வும், மாகாண விவசாய நடவடிக்கைகள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள். புனரமைத்தலும் நிர்வகித்தலும் போன்ற விடயங்கள் அடங்கும்.

### 2ஆவது நிரல் (மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள்

❖ இந்நிரலின் கீழ் மத்திய அரசு, மாகாணசபை தொடர்பாக மேற்கொள்ளத் தக்க **17 அதிகாரங்கள்** உள்ளடக்கப்பட்டுள்ளன. தேசிய ரீதியிலும் முக்கியத்துவம் பெறும் விடயங்கள் இதில் உள்ளடங்கி உள்ளன.
இதற்கான சட்டம் இயற்றும் தனி அதிகாரம் இலங்கைப் பாராளுமன்றத்துக்குரியதாகும். இந்நிரலில் அடங்கியுள்ள அதிகாரங்கள்

❖ **தேசிய கொள்கை உருவாக்கம்** ( எல்லா விடயங்களும் செயற்பாடுகளும் தொடர்பானவை) அரச பாதுகாப்பு , தேசிய ஒற்றுமை, உள்நாட்டுப் பாதுகாப்பு ,தேசிய சட்டமும் ஒழுங்கும், ஆகிய விடயங்கள் தொடர்பான கொள்கை உருவாக்கத்திற்கான அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

❖ **வெளிவிவகார நடவடிக்கைகள்**

❖ இலங்கை வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளும் எல்லா விடயங்களும் , இராஜதந்திர நடவடிக்கைகள் , ஐக்கியநாடுகள் சபை , வெளிநாட்டு ஒப்பந்தங்கள், சர்வதேச மாநாடுகளில் பங்குபற்றுதல். அதன் தீர்மானங்களை நிறைவேற்றல், போரும் சமாதானமும், வெளிநாட்டு நீதிமன்ற அதிகாரங்கள் என்பன இதில் அடங்கும்.

❖ நீதிமன்றத்துக்கும் ,நீதிமன்றத்தொகுதிக்கும் கீழ்ப்பட்ட வகையில் நீதியை அனுபவித்தல்

❖ தேசிய வருமானத்திற்கும், நிதிக்கொள்கைக்கும் , மற்றும் வெளிநாட்டு வளங்களுக்குமான நிதிநடவடிக்கைகள்.

❖ குடிவரவு, குடியகல்வு மற்றும் குடியுரிமை ,சனத்தொகை , மற்றும் புள்ளிவிபரங்கள் .

### 3ஆவது நிரல் ( இணைந்து நிறைவேற்றும் பணிகள்)

❖ இந்நிரலில் **36 அதிகாரங்கள்** குறிப்பிடப்பட்டுள்ளன. மத்திய அரசும், மாகாணசபைகளும் இணைந்து அனுபவிக்கும் அதிகாரங்கள் இந்நிரலில் அடங்கும் அதிகாரங்கள் பின்வருமாறு

- ❖ திட்டமிடல், தேசிய வீடமைப்பும் நிர்மாணமும், சமூகசேவைகளும் புனர்வாழ்வும், விவசாயமும் கமநலசேவையும், போன்றன அடங்கும்.

## தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் கட்டமைப்புரீதியான மாற்றம்.

- ❖ ***ஐக்கிய அமெரிக்கா சமஷ்டி அரசாக உருவெடுத்தமைக்கான காரணங்கள்***
- ❖ ஆரம்பக் குடியேற்றங்கள் நாட்டின் கிழக்குக் கரையோரமாக அமைந்திருந்தமை , 13 குடியேற்றங்களுடன் எழுச்சியடைந்த அமெரிக்க இன்று **50 மாநிலங்களைக்** கொண்டதாக விளங்குகின்றது.

- ❖ 13 குடியேற்றங்களும் சமஷ்டியாக உருவாக முன்னர் சுயாதினமான அரசுகளாக விளங்கின. பிற்காலத்தில் பொருளாதார அபிவிருத்தி, மற்றும் தேசிய பாதுகாப்பு, என்பவற்றை நோக்காகக் கொண்டு ஐக்கிய அமெரிக்கக் குடியரசுகளாக ஒன்றிணைந்தன.

- ❖ ஐக்கிய அமெரிக்கக் குடியரசுகள் ***கி.பி.1787*** இல் அரசியல் யாப்பை உருவாக்கும் போது அதிகாரத்தைப் பங்கீடு செய்வதற்கான சட்டத்தை யாப்பில் உள்ளடக்கி இருந்தன.

  அதன் படி மத்திய அரசின் அதிகாரங்களை யாப்பில் குறிப்பிட்டு ஏனைய அனைத்து அதிகாரங்களையும் மாநில அரசுகளுக்கு வழங்கியது. இதன் நோக்கம் மாநில அரசுகளைப் பலப்படுத்துவதாகும் .

### ❖ ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் அமைப்பின் கட்டமைப்பு

- ❖ **நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியால்** அதிகாரம் செயற்படுத்தப்படல்.
- ❖ சட்டத்துறையான காங்கிரஸ் பிரதிநிதிகள்சபை, செனட்சபை என்னும் இரட்டை மன்றமாக செயற்படுதல்.

- ❖ சனதிபதியால் சில அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தும் போது **செனட்சபையின் அனுமதியை பெறுதல்** வேண்டும் .

  **உ-ம்** போர்ப் பிரகடனம், உயர் அதிகாரிகளின் நியமனம், ( வெளிநாட்டு தூதுவர், உயர் நீதிமன்ற நீதிபதிகள்)
- ❖ ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் செனட்சபைக்கு **இரண்டு பிரதிநிதிகள்** வீதம், நியமனம் செய்தல்.
- ❖ சமஷ்டி நீதிமன்றத் தொகுதி ஒன்று செயற்படுதல்
- ❖ சட்டத்துறையான காங்கிரஸ் உருவாக்கும் சட்டம் ஒன்று அரசியல் யாப்புடன் முரண்படுமாயின் அதனை இரத்துச் செய்யும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- ❖ அரசியல் யாப்பை மாற்றம் செய்வதற்கு மத்திய அரசின் **2/3 பெரும்பான்மையும்** மாநில அரசுகளின் ¾ **பெரும்பான்மையும்** தேவைப்படுதல்.

- ❖ மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையில் அதிகாரங்களைச் செயற்படுத்துவது தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படின் அதனைத் தீர்ப்பதற்கான அதிகாரம் உயர் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**❖ ஐக்கியஅமெரிக்காவில் மத்திய மாநில அரசுகளுக்குரிய அதிகாரங்கள் சில பின்வருமாறு.**

| மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் | மாநில அரசுக்குரிய அதிகாரங்கள் |
|---|---|
| வரிஅளவிடலும்,அறவிடலும் | கல்வி |
| நிதிநடவடிக்கை | சுகாதாரம் |
| தேசியபாதுகாப்பைத்திட்டமிடல் | வீடமைப்பு |
| வெளிநாட்டுவர்த்தகமும்-வெளிநாட்டுவிவகாரமும் | உள்ளூராட்சி |
| தேசிய பொருளாதார அபிவிருத்தி | பெருந்தெருக்கள் |

- ❖ நிகழ்காலத்தில் ஐக்கியஅமெரிக்காவில் **மாநில அரசுகளை விட, மத்திய அரசாங்கம் பலம் பெற்று திகழ்கின்ற போக்கே** காணப்படுகின்றது. இதற்குரிய காரணம்
- ❖ நிதி தொடர்பாக மத்திய அரசு பலம் பெற்று இருத்தல்.
- ❖ சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளில் சிக்கல் வாய்ந்ததன்மை.
- ❖ இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட அரசியல் நிலமை.

**சுவிட்சர்லாந்து சமஷ்டி அரசாக எழுச்சியடைதல்.**

- ❖ ***சமஷ்டி அரசாக உருவாவதற்கான காரணங்கள்***
- ❖ தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டமை அதாவது ***பிரான்ஸ், ஜேர்மன், ஆஸ்த்திரியா, இத்தாலி,*** ஆகிய நாடுகளுக்கு மத்தியில் அமைந்திருந்தமை காரணமாகும்.
- ❖ **இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு தீர்வு** காணப்பட வேண்டிய நிலமை.
- ❖ அதிகளவு **தரைத்தோற்ற வேறுபாடு** காரணமாக பொருளாதார அபிவிருத்தி அடைவது கடினமாக இருந்தமை. சுவிட்சர்லாந்து சமஷ்டி அரசாக உருவாக முன்னர், பல்வேறு சிறிய அரசுகளாகக் காணப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் மத்திய கத்தோலிக்க புரட்டஸ்தாந்து சமயங்களிடையே தோன்றிய சிவில் யுத்தத்தினை சமஷ்ட்டி ஆட்சிமுறை உருவாவதன் மூலமே தீர்க்கப்பட்டது.
- ❖ சுவிட்சர்லாந்து **41300 சதுரகிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது**. அங்கு **ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி, உரோமானிய மொழியினைப் பேசும் மக்ககள் வாழ்கின்றனர்.** இம் மொழிகள் **அனைத்தும் அரசகரும மொழிகளாகும்**.

சுமார் 150 வருடங்களுக்கு முன்னர் சுவிட்சர்லாந்தில் அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது. இறுதியாக 1999ஆம் ஆண்டு அரசியல் யாப்பு சீர்திருத்தம் செய்யப்பட்டது. இதன்படி **'கென்ரன்'** எனப்படும் **26 மாநில அரசுகள்** அங்கு நிலவுகின்றன.

## சுவிட்சர்லாந்தின் சமஷ்டி முறையின் அரசியல் கட்டமைப்பு

- சமஷ்டி பேரவை என்னும் சட்டத்துறை, இரட்டை மன்றமாக செயற்படுதல் அவை **தேசிய சபை, அரசசபை** , என்பவையாகும்.
- நிறைவேற்றுத் துறையானது **7** பேரைக் கொண்ட ஒரு குழுவாக செயற்படுகின்றது. அக் குழுவின் அங்கத்தவர்களை சமஷ்டி பேரவை நியமனம் செய்யும்.
- நிறைவேற்றுக் குழுவினர் சமஷ்டி சபை என்று அழைக்கப் பட்டதுடன் அச் சபையில் ஒருவர் தலைவராகச் செயற்படுவர் ஆயினும் அத் தலைவர் ஏனைய குழு அங்கத்தவர்களிடையே மேன்மையானவராகக் கருதப்பட மாட்டார்.

## சுவிட்சர்லாந்து சமஷ்டி முறையின் சிறப்பியல்புகள்

- மத்திய அரசுக்கும் ,'கென்ரன்' அரசுக்குமான அதிகாரங்கள் யாப்பில் கூறப்பட்டுள்ளதுடன் ஏனைய அதிகாரங்கள் யாவும் மத்திய அரசுக்குரியன.
- 'கென்ரன்' அரசுகள் தீர்மானம் மேற்கொள்ளும் போது மக்கள் கருத்துக்களைக் கோருவதற்கு நேரடி சனநாயக முறைகளை பிரயோகிக்க முடியும்.
- 'கென்ரன்'களுக்கு தமது அதிகாரத்தை செயற்படுத்துவதில் சுயாதினமாக செயற்பட முடியாது.
- அதிகாரங்களை செயற்படுத்தும் போது பிரச்சினை ஒன்று உருவாகுமானால் அதனைத் தீர்க்கும் அதிகாரம் சமஷ்டி பேரவைக்குரியது

## மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள்

- வெளிவிவகாரம், போர் ,சமாதானம் என்பவற்றை பிரகடனப்படுத்தல், வெளிநாடுகளுடன் ஒப்பந்தம் செய்தல், பாதுகாப்பு மற்றும் இராணுவ நடவடிக்கை, தகவல் பரிமாற்றம், தபால் தந்திச்சேவை,

## 'கென்ரன்'களுக்குரிய அதிகாரங்கள்

- கல்வியும் உயர் கல்வியும், செய்திப் பத்திரிகைக் கட்டுப்பாடு, பெருந்தெருக்கள் , கைத்தொழில், சமயங்கள், தொற்று நோய்களைத் தடுத்தல், வங்கி நடவடிக்கைகள். போன்றனவாகும்.

ே

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்

இரண்டாம் தவணை– 2020

தரம் - 10 குடியியற்கல்வி செயலட்டை-1

அலகு:-2 கற்றல் காலம்:- 5பாடவேளை

## அதிகாரத்தைப் பன்முகப்படுத்தலும், பகிர்ந்தளித்தலும்

### பகுதி I

1. அரசின் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசுக்குள்ள ஆற்றல் எவ்வாறு அழைக்கப்படும்.

   ..........................................................................................................................................

2. மத்திய அரசிடமுள்ள நிர்வாக அதிகாரங்களுள் சிலவற்றை பிராந்திய நிர்வாக அலகுகளிடம் கையளித்தல் எவ்வாறு அழைக்கப்படும்.

   ..........................................................................................................................................

3. அதிகாரத்தின் இறுதி உரிமை மக்களிடையே உள்ளது . மக்களிடம் காணப்படும் அதிகாரம் எவ்வாறு அழைக்கப்படும்.

   ..........................................................................................................................................

4. 'எல்லா வகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய நிறுவனத்தினுள் குவிந்து இருப்பின் அது ஒற்றை ஆட்சி முறையாகும்' . இக் கருத்தினைக் கூறிய அறிஞர் யார்?

   ..........................................................................................................................................

5. இலங்கையின் தேசியமட்ட நிர்வாக செயற்பாடுகளின் உயர்நிலை அதிகாரி யார்?

   ..........................................................................................................................................

6. பொருளாதார முறை ஒன்றில் அதிகாரம் பெற்ற குழுவினரால் ஏனையோரை வழிநடத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி எந்த அதிகாரமாகும்?

   ..........................................................................................................................................

7. 'ஒரு மத்திய அதிகாரபீடம் மாத்திரம் சட்டம் இயற்றும் உயர் அதிகாரத்தை கொண்டிருப்பது ஒற்றையாட்சியின் அடிப்படைப் பண்பாகும்.' இக் கருத்தினைக் கூறிய அரசியல் அறிஞர் யார்?

   ..........................................................................................................................................

8. 'மத்திய அரசின் மேன்மை நிலையும் , மேலதிக இறைமையுமுள்ள நிறுவனங்கள் அரசியல் யாப்பில் இல்லாது இருப்பதும் ஒற்றையாட்சியில் காணப்படும் பிரதான பண்பாகும்', இக் கருத்தினைக் கூறிய அரசியல் அறிஞர் யார்?

   ..........................................................................................................................................

9. மத்திய அரசின் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை அதிகாரங்கள் அரசியல் யாப்பின் மூலம் பிராந்திய ஆட்சி அலகுகளிடம் ஒப்படைத்தல் எவ்வாறு அழைக்கப்படும்?

..........................................................................................................................................................

10. இந்தியாவில் சமஷ்டிமுறையில் அமைந்த பிரதேச அலகு எவ்வாறு அழைக்கப்படுகின்றது.?

..........................................................................................................................................................

11. சுவிட்சர்லாந்தின் பிரதேச அலகு எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

..........................................................................................................................................................

12. சமஷ்டி அரசு ஒன்றில் காணப்படும் அரசியல் முறை சமஷ்டி அரசு அல்லது வேறு எவ்வாறு அழைக்கப்படும்?

..........................................................................................................................................................

13. ‘வேற்றுமையில் ஒற்றுமைகாண்பதற்கு வழிவகுக்கும் ஆட்சி முறையாகும்’ இக் கருத்தைக் கூறிய அரசியல் அறிஞர் யார்?

..........................................................................................................................................................

14. ‘தத்தமது அதிகார எல்லைக்குள் சுயாதினமாகச் செயற்பட முடிந்த போதிலும் சிலவிடயங்கள் தொடர்பாக ஒற்றுமையுடன் ஈடுபடுவதற்கு வழிவகுக்கும் நிலைமையாகும்’ இக்கெருத்தைக் கூறியவர் யார்?

..........................................................................................................................................................

15. அநுராதபுரகாலத்தில் ‘கம்பார’, ‘காமினி’ போன்ற அதிகாரிகளை கிராம நிர்வாகத்திற்காக நியமித்த மன்னன் யார்?

..........................................................................................................................................................

16. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அதிகாரப் பரவலாக்கமாக மாநகரசபைக் கட்டளைச் சட்டம் நிறைவேற்றப் பட்ட ஆண்டு எது?

..........................................................................................................................................................

17. இலங்கையில் 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் உருவாக்கப் பட்ட உள்ளூராட்சி மன்றம் எது?

..........................................................................................................................................................

18. மலையகப் பகுதிக்கு சமஷ்டி ஆட்சி முறையின் தேவை பற்றி 1926ஆம் ஆண்டில் கருத்தினை வெளியிட்ட அரசியல் தலைவர் யார்?

..........................................................................................................................................................

19. மாகாண ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகின்றார்?

..........................................................................................................................................................

20. மாகாணசபை ஆளுநர் ஒருவரின் பதவிக்காலம் யாது?

..........................................................................................................................................................

21. ஒரு மாகாணசபையில் முதலமைச்சருடன் எத்தனை அமைச்சர்கள் கடமையாற்றவேண்டும்?

..........................................................................................................................................................

22. மாகாணசபை ஒன்றின் அதிகாரங்களும் ,தொழிற்பாடுகளும் வகுக்கப்பட்ட நிரலில் முதல் நிரலில் காணப்படும் மாகாணசபைக்குரிய அதிகாரங்களின் எண்ணிக்கை யாது?

...........................................................................................................................................

23. இரண்டாம் நிரலில் காணப்படும் அதிகாரங்களின் எண்ணிக்கை யாது?

...........................................................................................................................................

24. மூன்றாம் நிரலில் காணப்படும் அதிகாரங்களின் எண்ணிக்கை யாது?

...........................................................................................................................................

25. ஐக்கிய அமெரிக்காவில் தற்போது காணப்படும் மாநிலங்களின் எண்ணிக்கை யாது?

...........................................................................................................................................

26. சுவிட்சர்லாந்து நாட்டின் பரப்பளவு யாது?

...........................................................................................................................................

27. சுவிட்சர்லாந்தில் செயற்படும் கென்ரன்களின் எண்ணிக்கை யாது?

...........................................................................................................................................

28. இறுதியாக சுவிட்சர்லாந்தின் அரசியல் யாப்பு சீர்திருத்தம் செய்யப்பட்ட ஆண்டு எது?

...........................................................................................................................................

29. சுவிட்சர்லாந்தில் நிறைவேற்றுக் குழுவினர் எவ்வாறு அழைக்கப் படுகின்றனர்?

...........................................................................................................................................

30. சுவிட்சர்லாந்தின் நிறைவேற்றுத் துறையின் அங்கத்தவர்களை நியமனம் செய்யும் அதிகாரம் கொண்ட அமைப்பு எது?

...........................................................................................................................................

## பகுதி II

1. ஓற்றை ஆட்சியின் பொதுவான பண்புகள் இரண்டு எழுதுக?

.................................................................... ....................................................................

2. ஓற்றை ஆட்சி முறையின் நன்மைகள் இரண்டு குறிப்பிடுக?

.................................................................... ....................................................................

3. சமஷ்டி ஆட்சி முறையில் செயற்படும் இரண்டு அதிகார மையங்களைக் பெயரிடுக?

.................................................................... ....................................................................

4. சமஷ்டி அரசு வெற்றி பெறுவதற்கான இயல்புகள் இரண்டு எழுதுக?

.................................................................... ....................................................................

5. சுதந்திரத்தின் பின்னர் 1957 , 1965 ஆகிய ஆண்டுகளில் மேற் கொள்ளப்பட்ட இரண்டு வேறு வேறான ஒப்பந்தங்களை எழுதுக?

.................................................................... ....................................................................

6. மாகாணசபை ஒன்றின் பிரதிநிதிகளின் தொகையைத் தீர்மானிக்கும் இரண்டு விடயங்களை எழுதுக?

.................................................................... ....................................................................

7. மாகாணசபை ஒன்றின் முதலாம் நிரலுக்குரிய அதிகாரங்கள் இரண்டினை எழுதுக?

.................................................................... ..........................................................................................

8. மாகாணசபை ஒன்றின் மூன்றாம் நிரலுக்குரிய அதிகாரங்கள் இரண்டினை எழுதுக?

.................................................................... ..........................................................................................

9. ஐக்கிய அமெரிக்காவின் சட்டமன்றத்தின் இரு அவைகளும் யாவை?

.................................................................... ..........................................................................................

10. சுவிட்சர்லாந்தின் சமஷ்டி அரசு உருவாகுவதற்கான காரணங்கள் இரண்டினை எழுதுக?

.................................................................... ..........................................................................................

11. சுவிட்சர்லாந்தின் சமஷ்டி முறையின் சிறப்பியல்புகள் இரண்டு எழுதுக?

.................................................................... ..........................................................................................

12. ஐக்கிய அமெரிக்காவில் மாநில அரசுகளை விட மத்திய அரசு பலம் பெற்றுத் திகழ்கின்ற போக்கே காணப்படுகின்றது . இதற்கான காரணங்கள் இரண்டினை எழுதுக?

.................................................................... ..........................................................................................

13. மாகாணசபை ஒன்றின் முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் இரண்டு எழுதுக?

.................................................................... ..........................................................................................

14. நவீன அரசுகள் அதிகாரப் பங்கீடு செய்வதற்கான காரணங்கள் இரண்டினை எழுதுக?

.................................................................... ..........................................................................................

15. சுவிட்சர்லாந்தின் சமஷ்டிப் பேரவையின் இரட்டை மன்றமாகச் செயற்படும் இரண்டு சபைகளையும் தருக?

.................................................................... ..........................................................................................

## பகுதி III

1) இறைமைக்குள் அடங்கும் மூன்று விடயங்களை எழுதுக?

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

2) அதிகாரத்தின் மூன்று வகைகளைக் குறிப்பிடுக?

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

3) ஒற்றை ஆட்சி நிலவும் மூன்று நாடுகளைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

4) சுமஷ்டி அரசு ஒன்றின் பண்புகள் மூன்று தருக?..............................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................

..........

5) சமஷ்டி அரசின் புதிய போக்குகள் மூன்று தருக?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

.........................................................................................................................................................

6) சமஷ்டி முறையின் அனுகூலங்கள் மூன்று தருக?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

.........................................................................................................................................................

7) சமஷ்டி முறையின் பிரதிகூலங்கள் மூன்று தருக?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

.........................................................................................................................................................

8) மாகாணசபை ஒன்றின் ஆளுநரின் அதிகாரங்கள் , பணிகள் மூன்று எழுதுக?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

.........................................................................................................................................................

9) மாகாணசபை ஒன்றின் இரண்டாம் நிரலில் மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் மூன்று எழுதுக?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

.........................................................................................................................................................

10) ஐக்கியஅமெரிக்காவின் அரசியல் கட்டமைப்பின் சிறப்பியல்புகள் மூன்று தருக?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

.........................................................................................................................................................

11) ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் மூன்று எழுதுக?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

.........................................................................................................................................................

12) ஐக்கிய அமெரிக்காவின் மாநில அரசுக்குரிய அதிகாரங்கள் மூன்று எழுதுக?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

13) சுவிட்சர்லாந்தின் மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் மூன்று எழுதுக?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

14) சுவிட்சர்லாந்தின் கென்ரன்களுக்குரிய அதிகாரங்கள் மூன்று எழுதுக?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

15) சுவிட்சர்லாந்தில் பேசப்படும் மூன்று மொழிகளைக் குறிப்பிடுக?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

16) சுமஷ்டி ஆட்சி முறை நிலவும் மூன்று நாடுகளைப் பெயரிடுக?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

17) இலங்கையில் தனித்தனி மூன்று மாவட்டங்களை மட்டும் கொண்டிருக்கும் மூன்று மாகாணங்களைப் பெயரிடுக?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

18) மாகாணசபை ஒன்றின் அதிகாரங்கள் மூன்று தருக?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

19) (a) இலங்கையில் பிரித்தானிய ஆட்சியின் போது கொழும்பு மற்றும் கண்டி மாநகர சபைகள் உருவாக்கப்பட்ட ஆண்டுகளை முறையே குறிப்பிடுக.

.....................................................................................................................................

.....................................................................................................................................

(b) சுதந்திரத்தின் பின்னர் அதிகாரப் பரவலாக்கத்தின் பொருட்டு அரசியல் அதிகாரசபை முறை உருவாக்கப்பட்ட ஆண்டு எது?

.....................................................................................................................................

20) பிரித்தானியர் ஆட்சியின் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக பின்வரும் ஆண்டுகளில் நிகழ்ந்தவற்றை எழுதுக

(a) 1924.....................................................................................................................

(b) 1940.....................................................................................................................

(c) 1943.....................................................................................................................